**1.** கொடுக்கப்பட்ட தமிழ்ப் பகுதியை நன்கு படித்து கருத்துச் சிதையாமல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும்

சீட்டோ (SEATO) அல்லது மணிலா ஒப்பந்தம்

தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த அமைவு என்பது தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டுப்பாதுகாப்பை முன்னிறுத்தியாகும். மணிலா ஒப்பந்தம் (1954) அமெரிக்க ஐக்கியநாடு, பிரான்ஸ், இங்கிலாந்து, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளால் கையெழுத்திடப்பட்டது. இவ்வொப்பந்தத்தின், உறுப்பு நாடுகள், இப்பகுதியில் பொதுவுடைமைச் சிந்தனை பரவுவதையும், அக்கொள்கை செல்வாக்குப் பெறுவதையும், தடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது. அனால் நெட்டோ கூட்டமைப்பில் இருந்தது போன்று நிரந்தரப் படைகளையோ ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டையோ சீட்டோ கொண்டிருக்கவில்லை

**2.** கொடுக்கப்பட்ட ஆங்கிலப் பகுதியை நன்கு படித்து கருத்துச் சிதையாமல் தமிழில் மொழிபெயர்க்கவும்

Trees are very useful to us. They give us timber and firewood. The timber is used to make chairs, tables and other furniture. We get off oil from the oil seeds of some trees. The leaves and fruits of ome trees are used to prepare medicines

**3.** கொடுக்கப்பட்ட பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்பு தேவையில்லை

மொழிபெயர்ப்பு, எல்லாக் காலகட்டங்களிலும் தேவையான ஒன்று. விடுதலைக்குப் பிறகு நாட்டின் பல பகுதிகளையும் ஒரே ஆட்சியின்கீழ் இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தேசிய உணர்வு ஊட்டுவதற்கும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் இந்திய அரசு, மொழி பெயர்ப்பை ஒரு கருவியாகக் கொண்டது. ஒரு மொழியில் இருக்கும் நூல்களைப் பிற மொழியில் மொழி பெயர்த்தது; பல்வேறு மாநிலங்களில் இருந்த இருக்கின்ற, எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோரைப் பற்றிய நூல்களையும் வெளியிட்டது. இத்தகைய மொழிபெயர்ப்பு முயற்சிகள் சாகித்திய அகாதெமி தேசிய புத்தக நிறுவனம், தென்னிந்தியப் புத்தக நிறுவுனம் ஆகியவற்றின் மூலம் செய்யப்பட்டன.

மொழிபெயர்ப்பைக் கல்வியாக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெற முடியும். பல அறிவுத் துறைகளுக்கும் தொழில் துறைகளுக்கும் வெளிநாட்டவரை எதிர்பார்க்காமல் நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கிக் கொள்ளமுடியும். மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியும்; வேலைவாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும். நாடு, இன, மொழி எல்லைகள் கடந்து ஒருலகத் தன்மையைப் பெறமுடியும். நாடு விடுதலை பெற்ற பிறகு பலநாட்டுத் தூதரகங்கள் நம்நாட்டில் நிறவப்பட்டன. அவை, தங்களுடைய இலக்கியம், பண்பாடு, தொழில் வளர்ச்சி, கலை போன்றவற்றை அறிமுகப்படுத்தும் நோக்கில் தத்தம் மொழிகளைக் கற்றுக் கொடுக்கின்ற முயற்சியை மேற்கொண்டு வருகின்றன.

இதனைச் சார்ந்து பிற மொழிகளைக் கற்றுத்தரும் தனியார் நிறுவனங்களும் உருவாகின்றன. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பிற மொழிகளைக் கற்றுத்தரும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

பிறமொழி இலக்கியங்களை அறிந்து கொள்ளவும் அவை போன்ற புதிய படைப்புகள் உருவாகவும் மொழிப்பெயர்ப்பு உதவுகிறது. இலக்கியம் என்பது தன் அனுபவத்தை எழுதுவது என்றாலும் அது கலைச்சிறப்புடையதாக இருக்கிறபோது அனைவரது அனுபவமாகவும் பொதுநிலை பெறுகிறது. அத்தகைய பொதுநிலை பெற்ற மொழி வேலி சிறையிடுகிறது. மொழி வேலியை அகற்றும் பணியை மொழிபெயர்ப்பு செய்கிறது. ஜெர்மன் மொழியில் மொழிபெயர்ப்பின் மூலம் அறிமுகம் ஆன ஷேக்ஸ்பியர், அந்நாட்டுப் படைப்பாளர் போலவே கொண்டாடப்பட்டார்.

18ஆம் நூற்றாண்டு வரை வடமொழி நூல்கள் பல தமிழில் ஆக்கப்பட்டன. ஆங்கிலேயர் வருகைக்குப்பின், ஆங்கில நூல்களும் ஆங்கில வழியாகப்பிற ஐரோப்பிய நூல்களும் அறிமுகமாயின. இவ்வறில் தரமான நூல்கள் என்று பார்த்தால் சிலதான் எஞ்சும். இதே போலத் தமிழ்நூல்களும் பிறமொழிகளுக்கு அறிமுகமாயின. தமிழுக்குரிய நூலாக இருந்த திருக்குறள் உலக மொழிகளுக்குரியதாக மாறியது மொழிபெயர்ப்பால்தான்

VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

கொடுக்கப்பட்டுள்ள பத்தியை நன்கு படித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்

## 4. பொருள் உணர்திறன்

‘நாடும் மொழியும் நமதிரு கண்கள்” என்கிறார் மகாகவி பாரதியார். காலவெள்ளத்தில் கரைந்துபோன மொழிகளுக்கிடையில் நீந்தித் தன்னை நிலைநிறுத்திக் கொணடுள்ளது தமிழ். என்ன வளம் இல்லை என்று எண்ணி வியக்கத்தக்கவாறு பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்டு இயங்குகிறது நம் செந்தமிழ் மொழி. அனைத்து வளமும் உண்டென்று விடை பகர்கிறது தமிழ்ச்சொல் வளம்.

சொல்வளம் இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவேணும், தமிழ் மட்டும் அதில் தலைசிறந்ததாகும்.

தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, தமிழிலுள்ள ஒரு பொருட் பலசொல் வரிசைகள் அவற்றில் இல்லாக்குறை எந்தத் தமிழறிஞர்க்கும் மிகத் தெளிவாகத் தோன்றும்.

**கொழுந்து வகை**

தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்கள்

துளிர் அல்லது தளிர் : நெல், புல் முதலியவற்றின் கொழுந்து

முறி அல்லது கொழுந்து : புளி, வேம்பு முதலியவற்றின் கொழுந்து
குருத்து : சோளம், கம்பு, தென்னை, பனை முதலியவற்றின் கொழுந்து
கொழுந்தாடை : கரும்பின் நுனிப்பகுத ி

**பூவின் நிலைகள்**

பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்கள்
அரும்பு : பூவின் தோற்றநிலை
போது : பூ விரியத் தொடங்கும் நிலை
மலர் (அலர்) : பூவின் மலர்ந்த நிலை
வீ : மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலை
செம்மல் : பூ வாடின நிலை

1. அனைத்து வளமும் உடைய மொழி எது?
2. நாடும் மொழியும் நமதிரு கண்கள் என்றவர் யார்
3. குருத்து என்பது எவற்றின் கொழுந்தைக் குறிக்கும்?
4. பூ விரியத் தொடங்கும் நிலை எவ்வாறு அழைக்கப்படுகிறது?
5. கரும்பின் நுனிப்பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

குறிப்பு :கொடுக்கப்பட்டுள்ள சுருக்கக் குறிப்புக்களைக் கொண்டு விரிவாக எழுதுக 300 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்

**5.** மரத்தின் பயன் – சுற்றுச்சூழல் பாதுகாப்பு – பலவகை மரங்கள் வளர்த்தல் – மருத்துவம் – கால்நடை – கட்டுமானப்பொருள் – பள்ளிகளில் வளர்த்தல் – புவி வெப்பமயமாதல் – விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

குறிப்பு : 1. திருக்குறள் தொடர்பான கட்டுரை வரைதல்
2. கொடுக்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்
300 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்

**6.** 1. எதனையும் சாராத பொதுமையிலக்கியம் திருக்குறள் என்பதனை நிறுவுக
2. 'மனித வாழ்வுக்கு அன்பே அடிப்படை" என்பதைத் திருக்குறள் வழி விளக்குக
3. மக்கள் அனைவருக்கும் மனவலிமை வேண்டும் என்பதை வள்ளுவரின் ஊக்கமுடைமை எனும் அதிகாரத்தைக் கொண்டு விளக்குக
4. "அடக்கமுடைமை" என்ற பொருண்மையில் வள்ளுவர் கூறும் மனித விழுமியங்கள் குறித்து ஒரு கட்டு ரை வரைக
5. வாழ்வின் உண்மைகளை உணர்தல் எனும் நிலையினை வள்ளுவர் வழிநின்று விளக்குக

குறிப்பு : 1. கடிதம் வரைதல்

2. கொடுக்கப்பட்டுள்ள மூன்று வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்

250 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்

**7.** 1. 2023 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டு தெரிவு செய்யப்பட்ட சிறந்த நூல்களை எழுதிய நூலாசிரியர்களுக்கும், அவற்றைப் பதிப்பித்தப் பதிப்பகத்தாருக்கும் பரிசுத் தொகை வழங்கக் கோரி தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநருக்கு கடிதம் வரைக

2. சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்காக அளிக்கப்படும் இன்னுயிர் காப்போம். "நம்மைக் காக்கும் 48 திட்டம்" சரிவர இயங்குகிறதா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அறியும் வகையில் அறிக்கை ஒன்றைத் தயார் செய்க

3. அனைத்துக் கல்லூரிகளிலும் "திருக்குறளில் வாழ்வியல்" என்ற தலைப்பில் பேச்சுப் போட்டி நடத்துவதற்கான தமிழக அரசின் அறிக்கை ஒன்றினைத் தயார் செய்க

**8.** கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் எழுதுக

1. நாளுக்கு நாள
2. மட மட
3. கல கல
4. சடு குடு

**9.** பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க

1. வாடிவதங்கி
2. பட்டிதொட்டி
3. கல்விகேள்வி
4. நட்டநடுவில்

**10.** பிரித்தெழுதுக

1. ஒருலகம்
2. ஒப்பனையுடையவள்
3. இலங்குநூல்
4. பொருந்தமற்றது

**11.** எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக

1. கண்ணன் நேற்று வந்தான்
2. தேனீர் சுவையாக இருந்தது
3. நான்தான் வேகமாக ஓடினேன்
4. நானும் அவனும் சென்றோம்

**12.** பிழை நீக்கி எழுதுக

1. அவர் விட்டு சென்ற பணியைத் தொடர்வேன்
2. அச் செயலைப் புரிந்தது அவன் அல்ல
3. திருவளர்ச் செல்வன் மகிழ்நள் திருமணம் இனிதே நடைபெற்றது
4. அண்ணப் பறவை அளகினைத் திறந்தது

VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

1. Examine the model set of instructions for hoisting National Flag in educational institutions as per the Flag Code of India 2002
இந்தியாவின் தேசிய கொடி விதி 2002-ன்படி, கல்வி நிறுவனங்களில் தேசியக் கொடியை ஏற்றுவதற்கான வழிமுறைகளின் மாதிரி தொகுப்பை ஆய்வு செய்க

2. Analyse the major recommendations of Macaulay's Minute on Indian Education
மெக்காலேயின் "இந்தியக் கல்வி குறித்த பரிந்துரைகளை" பகுப்பாய்வு செய்க

3. "The ideals of Self-Respect Movement is the driving force in Tamil Nadu Politics/" - Discuss
"சுயமரியாதை இயக்கத்தின் இலட்சியமே தமிழக அரசியலில் உந்து சக்தியாக உள்ளது" - விளக்குக

4. Explain how the Indian capitalist class participated in the National Movement
இந்திய தொழில் அதிபர்கள் இந்திய விடுதலை இயக்கத்தில் எங்ஙனம் கலந்து கொண்டார்கள் என்பதை விவரி

5. Vellore Mutiny was a premature outbreak. - Discuss
வேலூர் கலகம் நன்கு முதிர்வடையாமல் வெளிவந்த கலகம் என்பதை விவரிக்கவும்

6. Explain the early career of Mohandas Karamchand Gandhi and impact of his philosophy on the Indian Society
மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் வாழ்க்கை மற்றும் இந்திய சமூகத்தின் மீதான அவரது தத்துவத்தின் தாக்கம் ஆகியவற்றை விளக்குக

7. Explain the categories, selection criteria, process and rules for the Padma Awards
பத்ம விருதுகளின் வகைகள், தேர்ந்தெடுப்பதற்கான தேர்வு அளவுகோல்கள், செயல்முறை மற்றும் விதிகளை விளக்குக

8. Justice party was not only a political party but a movement which pioneered social reform. Elucidate
நீதி கட்சி ஒரு அரசியல் கட்சியாக மட்டுமன்றி சமுதாய சீர்த்திருத்தத்தின் முன்னோடி இயக்கமாக திகழ்ந்தது என்பதை தெளிவாக்கு

9. Explore the theoretical base, evolution, repertoire and famous exponents of Bharatanatyam
பரதநாட்டியத்தின் அடிப்படை கோட்பாடு, பரிணாமம், திறமைகள் மற்றும் விரிவுரையாளர்களை ஆராய்க

10. Elucidate the circumstances that led to the partition of India and its impact on Free India
இந்தியாவின் பிரிவினைக்கு வழிவகுத்த சூழ்நிலைகள் மற்றும் சுதந்திர இந்தியாவில் அதன் தாக்கத்தை மதிப்பிடுங்கள்

VETRII IAS STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

11. Write a brief assessment of 73rd Constitutional Amendment Act
73வது அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தின் சுருக்கமான மதிப்பீட்டை எழுதவும்

12. Analyse the effects of abuse on children. Give positive suggestions
குழந்தைகள் மீதான துஷ்பிரயோகத்தின் விளைவுகளை பகுப்பாய்வு செய்யுங்கள் நேர்மறையான பரிந்துரை கூறுக

13. Analyse the impact of Globalisation in relationship with Right to Education
கல்வி உரிமையில் உலகமயமாக்கலின் தாக்கத்தை பகுப்பாய்வு செய்யுங்கள்

14. Why should government give importance to Prenatal and Postnatal Care? Analyse
மகப்பேறு மற்றும் பிரசவத்திற்கு முந்தைய பராமரிப்புக்கு அரசாங்கம் ஏன் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்? பகுப்பாய்வு செய்க

15. Write a detailed note on the problems of minorities in the Indian Context
இந்திய சூழலில் சிறுபான்மையினரின் பிரச்சினைகள் பற்றிய விரிவான குறிப்பினை எழுதுக

16. "Rural startups are paving way for Inclusive Development" – Justify the statement
"கிராமப்புற தொழில் முன்னெடுப்புகள் அனைவருக்குமான உள்ளடக்கிய வளர்ச்சிக்கு வழிவகுக்கின்றன" என்ற கூற்றை நியாயப்படுத்துக

17. Analyze the root causes and impact of violence. Justify the need to create awareness about the drastic effects of violence and suggest means to control it
வன்முறையின் மூல காரணங்களையும் தாக்கங்களையும் பகுப்பாய்வு செய்க. வன்முறையின் கடுமையான விளைவுகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் அவசியத்தையும் அதைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளையும் பரிந்துரைக்க

18. Explain the sociological perspectives on terrorism in India
இந்தியாவில் பயங்கரவாதம் பற்றிய சமூகவியல் முன்னோக்குகளை விளக்கவும்

19. Highlight the notable Social Welfare Schemes of Tamil Nadu in present day context
தற்போதைய சூழலில் தமிழகத்தின் குறிப்பிடத்தக்க சமூக நலத்திட்டங்களை எடுத்துக்காட்டுக

20. How the 73rd Amendment ensures the empowerment of women through Panchayatraj system?
பஞ்சாயத்து ராஜ் அமைப்பின் மூலமாக பெண்களுக்கான அதிகாரமளித்தலை 73வது சட்டதிருத்தம் எவ்வாறு உறுதி செய்கிறது?

**21.** List out the parameters for Evaluation of the citizen's charter
குடிமக்கள் சாசன மதிப்பீட்டிற்கு உதவக்கூடிய அளவுருக்களை பட்டியலிடுக

**22.** What are the norms of the code of conduct of Public Officials?
பொது அதிகாரிகளின் நடத்தைகளுக்கான நடத்தை விதிமுறைகள் யாவை?

**23.** Examine Tiruvalluvar's modernism through his views on "Upright Government" as mentioned in Chapter 55 of the Tirukkural
திருக்குறள் அத்தியாயம் 55ல் குறிப்பிடப்பட்டுள்ள "செங்கோண்மை" பற்றிய அவரது கருத்துக்கள் மூலம் திருவள்ளுவரின் நவீனத்துவத்தை ஆராய்க

**24.** Write an essay on moral and political attitudes
ஒழுக்கம் மற்றும் அரசியல் மனப்பாங்குகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக

**25.** Deliberate on the codes for public servants as prescribed by the Second Administrative Reforms Commission
இரண்டாவது நிர்வாக சீர்திருத்த ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட பொது ஊழியர்களுக்கான நெறிமுறை தொகுப்பு குறித்து விரிவாகக் கலந்தாய்க

**26.** Explicate the speciality of Butler's intuitionism
பட்லரின் உள்ளுணர்வுக் கொள்கையின் தனித்துவத்தை எடுத்தியம்புக

VETRI I.A.S STUDY CIRCLE
SUCCESS GUARANTEED
Since 2011

1. What were the major recommendations of the Sarkaria Commission Centre-State relations?
மத்திய-மாநில உறவுகளை மேம்படுத்துவதற்காக சர்காரிய ஆணையக்குழுவின் முக்கிய பரிந்துரைகள் யாவை?

2. Elaborate on the Indian Constitutional Provisions related to State Public Service Commission
மாநில தேர்வாணையம் தொடர்பான இந்திய அரசியலமைப்பு விதிகளை விவரிக்கவும்

3. Evaluate the role and responsibility of Government media in Election and Voting Behaviour in India
இந்தியாவில் வாக்கு நடத்தை மற்றும் தேர்தலின் போது அரசாங்க ஊடகத்தின் பங்கு மற்றும் பொறுப்புத்தன்மை குறித்து மதிப்பிடுக

4. Analyse major recommendations of First Administrative Reforms Commission in India
இந்தியாவின் முதல் நிர்வாக சீர்திருத்த ஆணையத்தின் முக்கிய பரிந்துரைகளை பகுப்பாய்வு செய்க

5. Has the Right to Information Act brought transparency and accountability in governance in india? Discuss
தகவல் அறியும் உரிமைச் சட்டம் இந்தியாவின் நிர்வாகத்தில் பொறுப்பு மற்றும் வெளிப்படைத் தன்மையை கொண்டு வந்துள்ளதா? விவாதி

6. "With the enactment of the 73rd Amendment Act, there were steps taken to strengthen women participation in Local Governance". Critically Analyse.
"73வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் உள்ளாட்சி நிர்வாகத்தில் பெண்களின் பங்களிப்பை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது". பகுப்பாய்வு செய்க

7. Discuss the important stages in making of Union Budget
ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை தயாரிப்பில் உள்ள முக்கிய படிநிலைகளைப் பற்றி விவாதிக்க

8. How do the Directive Principles of State Policy in the Indian Constitution help to strengthen the social and economic dimension of democracy?
இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் எவ்வாறு அரசின் வழிகாட்டும் நெறிகள் சமூக மற்றும் பொருளாதார வழியில் மக்களாட்சியை பலப்படுத்த உதவுகின்றன?

9. Election Commission is the Custodian of electoral process in India – Justify this statement whith evidences of relevant constitutional and statutory provisions

இந்தியத் தேர்தல் ஆணையமே தேர்தல் நடைமுறைகளின் பாதுகாவலன் – இக்கூற்றை சம்பந்தப்பட்ட அரசியலமைப்புச் சட்ட விதிகள் மற்றும் பிற சட்ட விதிமுறைகளைக் காட்டி நியாயப்படுத்துக

**10.** Elaborate on the roel of Artificial Intelligence in Digital India initiatives with suitable illustrations
டிஜிட்டல் இந்தியா முயற்சிகளில் செயற்கை நுண்ணறிவின் பங்கினை உரிய உதாரணங்களுடன் விவாரிக்கவும்

**11.** Describe the classification of Bonsai
போன்சாய் தாவரங்களின் வகைப்பாட்டினை விளக்கவும்

**12.** Explain in detail about :
(a) Routing Information Protocol (RIP)
(b) Open-Shortest Path First (OSPF)
கீழ்காண்பவற்றை பற்றி விரிவாக எழுதுக
(அ) Routing Information Protocol (RIP)
(ஆ) Open-Shortest Path First (OSPF)

**13.** Write short notes on :
(a) Antiseptic
(b) Disinfectant
சிறுகுறிப்பு வரைக
(அ) நச்சு தடை மருந்து
(ஆ) தொற்று நீக்கி

VETRII I.A.S STUDY CIRCLE
SUCCESS GUARANTEED
Since 2011

**14.** Explain how we can utilize AI in nanotechnology
செயற்கை நுண்ணறிவை எவ்வாறு "மீநுண்" (நானோ) தொழில் நுடபத்தில் பயன்படுத்தலாம் என்பதை விளக்குக

**15.** What is intellectual property rights and discuss in detail about its different components
அறிவுசார் சொத்துரிமை என்றால் மற்றும் அதன் வெவ்வேறு கூறுகள் பற்றி விரிவாக விவாதிக்கவும்

**16.** Give reasons
(a) Impure metal corrodes faster than pure metal under identical conditions
(b) Iron corrodes under drops of salt solution
(c) Galvanized containers are not used for storage of food products, but tin coated containers are used
காரணம் தருக

(அ) தூய்மையற்ற உலோகம் தூய உலோகத்தை விட வேகமாக அரித்துப் போகிறது
(ஆ) உப்புக் கரைசலின் கீழ் இரும்பு துருப்பிடிக்கிறது
(இ) துத்தநாக முலாம் பூசப்பட்ட கொள்கலன்கள் உணவுப் பொருட்களை சேமிக்கப் பயன்படுத்தப்படுவதில்லை. ஆனால் வெள்ளீயம் பூசப்பட்ட கொள்கலன்கள் பயன்படுத்தப்படுகின்றன

**17.** What is type 2 diabetes? What are facors causing it?
இரண்டாம் வகை நீரிழிவு என்பது என்ன? அதனை உருவாக்கும் காரணிகள் யாவை?

**18.** What is Robotics?
(a) Do robotics and artificial intelligence mena the same?
(b) Explain the advantages and disadvantages of Robotics
எந்திரவியல்/ரோபோடிக்ஸ் என்றால் என்ன?
(அ) செயற்கை நுண்ணறிவு மற்றும் ரோபோடிக்ஸ் ஆகிய இரண்டும் ஒரே பொருள் கொண்டுள்ளனவா?
(ஆ) எந்திரவியலின் நன்மைகள் மற்றும் தீமைகளை விளக்குக

**19.** Summarize how Saivism flourished in Tamil Nadu
தமிழகத்தில் சைவசமயம் பெற்றிருந்த செலவாக்கினைப் பற்றி தொகுத்தெழுதுக

**20.** Write about the political and social changes brought about by drama in the 20th Century
இருபதாம் நூற்றாண்டு நாடகங்கள் ஏற்படுத்திய அரசியல், சமூக மாற்றங்கள் குறித்து எழுதுக

**21.** Describe with suitable examples the impact and influence of Tamil Literature on Tamil Movie Songs
தமிழ் இலக்கியங்கள் திரையிசைப் பாடல்களில் எற்படுத்தியிருக்கும் தாக்கத்தினை சான்றுகளுடன் விவரி

**22.** Elucidate the reasons how Tanjore Paintings prospered during Chola Period
சோழர் காலத் தஞ்சை ஓவியங்கள் செல்வாக்குப் பெற்றமைக்கான காரணங்களை எடுத்துரைக்க

**23.** How has the status of women changed due to social and cultural changes in Tamil Nadu?
தமிழகத்தில் எற்பட்ட சமூக, பண்பாட்டு மாற்றங்களினால் பெண்களின் நிலை எவ்வாறு மாறியுள்ளது?

**24.** Describe the cultural traditions of Sangam people with evidence
சங்க கால மக்களின் பண்பாட்டு மரபுகளைச் சான்றாதாரங்களோடு விவரி

VETRI IAS STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

**25.** Write about the schemes formulated by the 'Department of Social Welfare' during the rule of Dravidian Movements
திராவிட இயக்கங்களின் ஆட்சியில் "சமூக நலத்துஜற" வகுத்தளித்த திட்டங்கள் குறித்து எழுதுக

**26.** Write in detail about the evidences of pre-historic Tamil People and their existence traced so far
கற்காலத் தமிழ் மக்களைப் பற்றிய சான்றுகளைக் குறிப்பிடுக

1. Elaborate the Industrial Problems of India
இந்தியாவின் தொழில்துறை பிரச்சனைகள் பற்றி விவரி

2. Discuss the Environmental and Ecological Implication of Green Revolution in India
இந்தியாவில் பசுமைப் புரட்சியின் சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல் தாக்கங்கள் பற்றி விவாதிக்கவும்

3. Discuss the need of conservation and utility of water resources in India
இந்தியாவின் நீர் ஆதாரங்களின் பாதுகாப்பு மற்றும் பயன்பாட்டின் தேவை குறித்து விவாதி

4. Discuss the topography of Chambal basin and trace the ravines present in Tamil Nadu
சம்பல் பகுகையில் காணப்படும் நிலப்பரப்பைப் பற்றி விவாதிக்கவும் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள பள்ளத்தாக்குகளைக் (Ravines) கண்டறியவும்

5. Describe the bottom relief features of the Arabian Sea
அரபிக்கடலின் கடலடி நிலத்தோற்றத்தினை விளக்குக

6. Explain the major tribes o f India
இந்தியாவின் முக்கிய பழங்குடிகளை விளக்குக

7. Elucidate the objectives and procedures of Samudrayaan
சமுத்ராயான் திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் நடைமுறைகளை தெளிவுபடுத்துங்கள் அதனை செயல்படுத்துவதில் NIOT-இன் பங்களிபினையும் குறிப்பிடவும்

8. Compare and contrast between National Park, Sanctuary, Biosphere and examine the objectives of Man and Biosphere (MAB) Programme
தேசியப் பூங்கா, சரணாலயம், உயிர்கோளம் ஆகியவற்றை ஒப்பிட்டும், வேறுபடுத்தியும், மேலும் மனிதன் மற்றும் உயிர்கோளத் (MAB) திட்டத்தின் நோக்கங்களை ஆய்வு செய்க

9. Explain the significance of Kigali amendment to phasedown of hydrofluorocarbons with time frame schedule
ஹைட்ரோபுளுரோகார்பன்களைப் படிப்படியாக அகற்றும் பொருட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட கிகாலி சட்டத் திருத்தத்தின் முக்கியத்துவத்தினைக் கால வரையறை அட்டவணைகளுடன் விளக்குக

10. Discuss the factors responsible for changing Monsoon Patterns in India
இந்தியாவில் மாறிவரும் பருவமழை வடிவங்களுக்கு காரணமான காரணிகளைப் பற்றி விவாதிக்கவும்

11. Explain the significance of mission life style for environment inclimate action
காலநிலை நடவடிக்கைகளில் சுற்றுச்சூழலுக்கான பணி வாழ்க்கை முறையின் முக்கியத்துவத்தை விளக்கவும்

12. Discuss about the solar scheme of Tamil Nadu Government and its benefits
தமிழக அரசின் சோலார் திட்டம் மற்றும் அதன் பயன்கள் குறித்து விவாதிக்கவும்

13. Describe the four different stages of environmental clearance process according to Environmental Impact Assessment (EIA) notification 2006
சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006-இன் படி, சுற்றுச்சூழல் அனுமதி பெறும் செயல்முறையில் உள்ள நான்கு வெவ்வேறு நிலைகளை விவரிக்கவும்

14. Biomining has emerged as an effective method to reclaim open dumpsites - Illustrate
உயிரினங்களின் துணைகொண்டு தாதுக்களைப் பிரித்தெடுத்தல் முறை திறந்தவெளிக் குப்பைக்கிடங்குகளை மீட்டெடுப்பதற்கான ஒரு சிறந்த முறையாக உருவெடுத்துள்ளது – இதனை விளக்குக

15. Write about the benefits of National Parks and wildlife sanctuaries and list the important national parks andwildlife sanctuaries in India
தேசிய பூங்காக்கள் மற்றும் வனவிலங்கு சரணாலயங்களின் நன்மைகள் பற்றி எழுதவும் மேலும் இந்தியாவில் உள்ள முக்கியமான தேசிய பூங்காக்கள் மற்றும் வனவிலங்கு சரணாலயங்களை பட்டியலிடுக

16. Explain the structural components and their functions in the Ecosystem
சூழல் அமைப்பின் கட்டமைப்புக் கூறுகள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள் பற்றி விரிவாக எழுதுக

17. Explain the role of Research and Development in Indian Economy
இந்தியப் பொருளாதாரத்தில் ஆ ராய்ச்சி மற்றும் வளர்ச்சியின் பங்கினை விளக்குக

18. State the role Public Sector in Indian Economic Development
இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் பொதுத்துறையின் பங்கைக் குறிப்பிடவும்

19. Examine the role of Technology in improving the efficiency of the Public Distribution System (PDS)
பொது விநியோக முறையின் செயல்திறனை மேம்படுத்துவதில் தொழில்நுட்பத்தின் பங்கை ஆராய்க

20. Write the objectives of New Economic Policy
புதிய பொருளாதாரக் கொள்கையின் நோக்கங்களை எழுதுக

**21.** What are the business opportunities for budding entrepreneurs in the travel and tourism sector?
வளரும் தொழில் முனைவோர்களுக்கு பயணம் மற்றும் சுற்றுலா துறைகளில் உள்ள வணிக வாய்ப்புகள் யாவை?

**22.** Explain the role of Non-Banking financial institutions for Indian Economic Development
இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு வங்கி சாரா நிதி நிறுவனங்களின் பங்கை விளக்கவும்

**23.** Evaluate the tax Revenue of the Union Government
ஒன்றிய அரசின் வரி வருவாயை மதிப்பிடுக

**24.** Discuss the Global Economic Crisis and its impact on selected economic indicators of India
உலகளாவிய பொருளாதார நெருக்கடி மற்றும் இந்தியாவின் தெரிவு செய்யப்பட்ட பொருளாதார குறிகாட்டிகளின் மீதான அதன் தாக்கங்களை விவாதி

**25.** Evaluate the progress of power sector development in Tamil Nadu
சுதந்திரத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள மின்துறை வளர்ச்சியின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்க

**26.** Explain the similarities and dissimilarities of the Old Pension and Unified Pension Schemes
பழைய ஓய்வூதியம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டங்களுக்கு இடையே உள்ள ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகளை விளக்குக